# சற்றே நேரம்

வாசற்புறம் திண்ணையில் சாய்வு நாற்காலியைப் போட்டுக்கொண்டு பின்னல் வேலையில் ஈடுபட்டிருந்தேன் நான். தெருவோடு ஓட்டிய வீடு அல்லது எமது. சிறியதொரு காம்பவுண்டுக்குள்ளே தெருவுக்கு எட்டடி உட்புறமாகத் தள்ளியிருக்கும் வீடாதலால் நான் பின்னல் வேலை செய்யும்பொழுது வாசற்திண்ணைக்குத்தான் வருவேன். இப்பொழுதோ ஊரில் அம்மன் திருவிழாவும் நடக்கிறது; சாரிசாரியாகச் செல்லும் ஜனங்களின் பலவிதத் தோற்றங்களை ரசித்தவாறே தையல்வேலை செய்துகொண்டிருந்தேன்.

அடுத்தகத்து குந்தளம் தன் குழந்தைகளோடு வாசற்புறம் வந்து ஜட்காவினருகு நின்றாள். குழந்தைகள் போட்டா போட்டி போட்டுக்கொண்டு ஜட்காவில் ஏற முயற்சிப்பதையும், கையில் தேங்காய் பழம் சகிதம் நின்று குந்தளம் தன் மக்களை அடக்குவதும் கண்டேன். நான் கூர்ந்து நோக்குவதைக் கவனித்துவிட்ட குந்தளம் என்னைப் பார்த்து முறுவலித்துவிட்டு "கோயிலுக்கு!" என்றாள். நானும் ஆமோதிக்கும் வகையில் முறுவலித்துத் தலையசைத்தேன். என் மனதில் வேறு யோசனை, என் குழந்தைகளைப்பற்றி. குந்தளத்தின் குழந்தைகள் திருவிழாத் தேர்களையும் கடைகளையும் பார்க்க மூன்று நான்கு தடவை போய்வந்துவிட்டனர். தாத்தாவோடு ஒரு தடவை, பாட்டியோடு ஒரு முறை என்று இப்படியாக அவர்கள் சென்றுவந்ததை என் குழந்தைகள் நினைப்பூட்டிக்கொண்டேதான் இருக்கின்றன. ஆனால் எனக்கு வேளையும் வசதியும் ஏனோ விரைவில் வரவில்லை. நாளையோ, நாளை நீக்கி மறுநாளோ என் குழந்தைகளுடன், என் கணவர் துணையோடு போய்வரவேணும் என்னும் யோசனையில் ஆழ்ந்துவிட்டேன்.

சிறிது நேரத்திற்கெல்லாம் தலை நிமிர்ந்தேன். குந்தளத்தின் மாமியார் காவேரியம்மாள் பரக்கப் பரக்க எங்கள் வீட்டு வாசல்வழியே சென்று குந்தளத்தின் வீட்டுக்குள் நுழைவதைக் கண்டேன். குந்தளத்தின் வீட்டில்தான் காவேரியம்மாளும் அவர் கணவரும் இருக்கிறார்கள் - ஆனால் காவேரியம்மாள் அடிக்கடி தம்முடைய தம்பியின் வீட்டிற்குப்போய் தங்குவது சகஜம்; பிறந்தகம் கொண்டாட அல்ல, தம்பி மனைவின் உதவிக்குத்தான் போவார்._ இரண்டு நாட்களுக்குமுன்பு அங்கே சென்றவர் இப்பொழுதுத்தஅன் இத்தனை பரபரப்புடன் வருகிறார். அந்த மூதாட்டியைக் கண்டதும் என் சிந்தனை வேறு திசை திரும்பியது. பிள்ளையின் வீட்டிலும் தம்பியின் வீட்டிலும் மாறிமாறித் தங்கி சமயசஞ்சீவிபோல உதவிகள் புரிவதிலேயே கருத்தாயிருக்கும் அந்த அம்மையைப்பற்றி நினைத்து வியந்தேன். இரண்டிடங்களிலும் அவருக்கு செல்வாக்கு, ஆதரவு, மதிப்பு; நிதானமான நடையும், மென்மையான சொல்லும், கனிவான உள்ளமும் உள்ள அந்த அம்மாள் ஆண்டு அறுபது கண்டுவிட்டார். உதவி புரிபவராயும், துணைநிற்பவராயும், சேவைசெய்பவராயும், அந்த மூதாட்டி விளங்குகிறார். மாமி மெச்சும் மருமகளும், மருமகள் போற்றும் மாமியும் எங்கள் அடுத்தகத்தில் உண்டு!

தளரா ஊக்கமும் நல்லதனமும் உருவெடுத்தாற்போன்று காவேரியம்மாள் சென்றதைக்கண்டு நான் இவ்வாறு எண்ணத்தொடங்கிய சற்றுநேரத்திற்கெல்லாம் காவேரியம்மாள் எங்கள் வீட்டு கேட்டருகு காட்சியளித்தார். அங்கேயே நின்று "எங்கே இவர்களைக் காணோம்? இங்கே வந்தார்களா நாட்டுப்பெண்ணும், குழந்தைகளும்?" என வினவினார்.

"இல்லையே," என்று சொன்னவாறே இடம் விட்டு எழுந்தேன். குந்தளம் கோயிலுக்குப் போயிருப்பதாகச்சொல்ல நாஎழும்புமுன் காவேரியம்மாள் அங்கிருந்து போய்விட்டார். நிதானமான நடையை இதுவரை அவரிடம் கண்டுவந்த நான் இப்பொழுது ஆச்சரியப்பட்டுத்தான் போனேன்.

இரண்டே நிமிஷங்களில் மீண்டும் காட்சியளித்தார் அந்த மூதாட்டி. இப்பொழுது எட்டிநிற்காமல் நேரே படியேறி, கேட்டைத்திறந்து திண்ணைக்கு வந்துவிட்டார்; தொப்பென உட்கார்ந்து விட்டார். நான் நாற்காலியை விட்டு மீண்டும் எழுந்து கீழே அவரருகு அமர்ந்தேன்.

“ஏன் இப்படிப் போய்விட்டாள்? தெரியவில்லையே எனக்கு?” என்று சொன்னார் எங்கோ பார்த்துக்கொண்டு, தனக்குத்தானே பேசுக்கொள்வதுபோல! நெற்றியில் வியர்த்துவிட்டது; மூச்சு இறைக்கிறது - பேச்சுத் தடுமாறுகிறது அந்த மூதாட்டிக்கு.

“திருவிழாவிற்குப் போயிருக்கிறாள் மாமி!” என்று சொன்னேன் நான்.

“ஆமாம் - தெரியும்! வான்னுதானே பேரன் வந்து கூப்பிட்டுது! ஓடோடிவந்தேன்!நான் வரத்துக்குள்ளே காணோமே!போய்விட்டாளே? ஏன் போயிட்டா இப்படி - தெரியல்லையே!” என்று காவேரியம்மாள் பதிலளித்தார்.

“எனக்கும் தெரியல்லையே . . .” என்று இழுத்தேன். அந்த மாமியின் ஏமாற்றம் எனக்குப் புலனாகியது.

“என்னை மெனக்கெடக் கூப்பிட்டு ஏன் இப்படிப்போனாள்?” என்று கேள்வி கேட்டுக்கொண்டார் மாமி!

என்ன பதிலளிப்பது நான்? என் மௌனம் மாமியின் சிந்தனையோட்டத்திற்குத் துடுப்புப்போலாகியது.

“பேரன்தான் வந்தான் - அடுப்பங்கரைக்கு என்னைத் தேடிண்டு வந்து சொன்னான்; சொல்லிவிட்டு கிளம்பிவருவதற்குள்ளே போயிட்டாளே? அந்தப் பிள்ளையும் வந்தப்புறம்தானே போனாள்?” என்று கேட்டார்.

“எல்லாக்குழந்தைகளும் போனதாகத்தான் தோன்றுகிறது!” என்றேன். ஆம் - குந்தளம் தன் மக்கள் எல்லோருடனும் சென்றதைப் பார்த்தேன். மாமிய்யர் வரும்வரை காத்திருக்க குந்தளத்திற்குப் பொறுமை இல்லாது போயிற்றா?

“என்னான்னு வந்து பேரன் கூப்பிட்டான் மாமி? மெனக்கெடக் கூப்பிட்டுவிட்டுப் போவாளா? அப்படிச் செய்யமாட்டாளே குந்தளம்!” என்று சமாதானங்கூற முயன்றேன்.

மாமியின் ஏமாற்றம் என் சமாதானத்தின்முன் தாழவில்லை.

“என்னமோம்மா . . . எனக்கு இது அவமானமாயிருக்கு . . .வேணும்னே தானொ . . .”

நாட்டுப்பெண்ணைப்பற்றி குற்றங்கூறி அறியாதவருக்கு மேலே பேச நாக்கூசியது போலும்!

குந்தளத்தின் பால் மாமியின் நல்லெண்ணம் தளர்வதை விரும்பாத நான் சன்று எடுப்பாகவே பேசத் துவங்கினேன்.

“குந்தளம் அப்படிச் செய்யமாட்டாள் மாமி! ஒருநாளும் அவள் பல்லிடுக்குப்பேச்சு கெடுதலாக உங்களைப்பற்றி சொன்னதில்லை - நல்லதுதான் சொல்லியிருக்கிறாள்; நீங்களும் துரும்பத்தனைச்சொல் அவளைப்பற்றி குறைப்பட்டுக்கொண்டதில்லை. இன்றைக்கு இப்படி உங்கள் மனது வேதனைப்படும்படி ஏன் இப்படி நடந்துவிட்டதோ? எனக்கும் ரொம்பக் கஷ்டப்படுகிறது மனசு” என்றேன்.

ஆனால் மாமியின் அப்போதைய உணர்ச்சிகள் பழுது பட்டவையாகவே இருந்தன. "எப்போதாவது இந்தமாதிரி அவமானம் பண்ணியிருந்தால் எனக்கு மனசு கொதிக்காதே! அவளுடைய வழக்கம்தானேன்னு வச்சுப்பேனே! இன்னிக்கு இப்படிப் பண்ணினதுதானே பொறுக்கமாட்டேங்கிறது பாழும் மனசு!" என்று வேதனை குமுற மொழிந்தார் அந்த மூதாட்டி.

திருவிழாவுக்கு ஒரு தடவை மாமி போய் வந்து விட்டிருந்தார் எனினும் வயதிற்குரிய ஆசையும் அந்த ஆசையுடன் பரபரப்புடன் வந்ததற்கு ஏற்பட்ட ஏமாற்றமும் மாமியார் ஸ்தானமும் எதிர்பாராத அனுபவமும் அந்த அம்மையை ஆட்கொண்டுவிட்டன!

"ஒருக்கால் இராத்திரிக்குச் சமைத்துவைக்கக் கூப்பிட்டிருப்பாளோ என்று பார்த்தேன். உள்ளே எல்லாம் சமைத்து மூடியிருக்கு! என் சமையல் காரியம் எதுவும்தான் அவளுக்கு அவசியமில்லையே!"

நாட்டுப்பெண் குந்தளம் தனக்குக் காரியம் விடாமல் எல்லாம் தானே செய்வதை இத்தனைநாள் குற்றமாகக் கூறாத மூதாட்டி - இன்று நல்லதைக்கூட பொல்லாததாகக் கருதிவிட்டார்!

மாமியே பேசிக்கொண்டு போனார்: "வீட்டுக்கு மாமனார் காவல் - சமையலோ ஆயிடுத்து - எதற்கு நான் வரணும்? ஏன் இப்படிப் பண்ணிவிட்டாளோ எனக்குப் புரியவேயில்லை! இப்போ நான் இங்கே இருக்கிறதா? தம்பியாத்துக்குப் போறதா?"

மாமியின் வேதனை எனக்கு நிஜமாகவே சங்கடம் அளித்தது. என்ன பேசுவேன் நான்?

நல்ல வேளை! இந்தச்சமயம் காவேரிமாமியின் கணவர் கைத்தடியுடனும், அங்கவஸ்திராதி ஆடைகளுடனும் காட்சியளித்தார். அவர் வந்த தோரணையை மிஞ்சிவிட்டது அவர் பேசிய தோரணை!

"ஏய் - எங்கே - இங்கே வந்துட்டே! வீட்டைப்பார்த்துக்கொள்ள யாரையும் காணோம் அங்கே! இங்கே உட்கார்ந்துட்டையே!"

கணவரின் தலையைக் கண்டதுமே எழுந்துவிட்ட காவேரிமாமி - அவர் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே திண்ணையிறங்கி கேட்டருகு போய்விட்டார். கிழவர் பேசிமுடிந்ததும் "திருவிழாக்குப் போகணும்னு பேரன் வந்து அழாச்சானேன்னு பரக்கப் பரக்க வந்தேன்! வீட்டுக்காவல்னு தாத்தா சொல்றேளாக்கும்! இருக்கட்டும். உடனுக்குடனே தம்பியகமுடையாளண்டை போய் எப்படிச் சொல்லிக்கிறது? இதுவும் நல்லதுக்குத்தான் . . . " என்றார் சற்று மனத்தாங்கலாக.

தாத்தா புருவத்தை நெறித்தார். "யார் உன்னைத் திருவிழாவுக்குப் போகணும்னு கூப்பிட்டது? அவாள்ளாம் திருவிழாவுக்குப் போகிறதாக திடுதிப்னு நிச்சயமாச்சு; எனக்கும் வெளியே காரியமிருக்கு. வீட்டுக்கு உன்னைக் காவல்போடலாம்னு பேரனை விரட்டினேன் நான் தான்!" என்று பகர்ந்த்தார் அவர்.

"நீங்கள்தானா சொல்லிவிட்டது?" என்று வினவிய காவேரி மாமியின் குரலில்தான் என்ன தெளிவு! என்ன ஆவல்!

கேட்டைத் திறந்துகொண்டு உடனே கணவரைப் பின்தொடர்ந்து சென்றுவிட்டார். தாத்தா தெருவோடு நீள நடந்துசென்றார். காவேரி மாமி வீட்டுள் சென்று கதவுகளைத் தாளிட்டுக்கொண்டு சாவிகொத்துடன் மீண்டும் என்னிடம் வந்து ஆர அமர திருப்தியுடன் உட்கார்ந்தார்.

“குந்தளம் புறப்படறத்துக்கு முன்னாடியே இவா வெளியே கிளம்பினாராம். ‘உன் மாமியாரை வரச்சொல்லியிருக்கேன் - காவல் வைச்சுட்டுப்போ’ன்னாராம். குந்தளம் சொன்னாளாம் - பார்த்துக்கொள் - ‘வீட்டைப் பார்த்துக்கொள்ளுன்க்கோன்னு அம்மாகிட்ட சொல்லிண்டுபோக எனக்கு வெட்கமாயிருக்கு! நான் முன்னாடியே போயிடறேன்’ - அப்படீன்னு அவசர அவசரமாப் புறப்பட்டாளாம்! பேரனுக்கு முழுக்கச் சொல்லத் தெரியல்லை - நான் கண்டேனா இப்படீன்னு? எனக்கு மட்டும் ‘குந்தளம் இப்படி செய்யமாட்டாளே’ன்னு தான் எண்ணம்!” என்று மொழிந்தார் ஆறுதலுடன்.

காவேரியின் புனிதத்திற்கும், காவேரிமாமியின் உள்ளத்தின் புனிதத்திற்கும் நான் இணை கூறினால் அது சரிதானா?

சற்றுநேரம்-சிறிது கலக்கம். இதைப் பொருட்படுத்தலாமா?

கொஞ்சநேரம் ‘அவர்களை’ப்பற்றி வேற்றுமை தோன்ற பேசினாலும், பிறகு நாட்டுப்பெண்ணின் பெயரை எத்தனை அருமையுடன் குறிப்பிட்டார்! தவறு செய்துவிட்டதாக மனமுருகி அன்பைப் பெருக்கிக்கொள்ளும் பெருந்தகை மனமுள்ள அந்த மூதாட்டி தூய்மையே உருவாகத்தான் காட்சியளிக்கிறார்.

**********

(வெள்ளிமணி மலர், செப்டம்பர் 15, 1951)